செய்தி வெளியீடு எண் : 799 நாள்: 19.05.2022

<u>செய்தி வெளியீடு</u>

# அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் கண்காட்சி மற்றும் தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனைகள் ஓவியக் கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (19.5.2022) கோயம்புத்தூர், வ.உ.சிதம்பரனார் மைதானத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் மற்றும் அவற்றின் மாதிரிகளின் கண்காட்சி மற்றும் தமிழ்நாடு அரசு ஓராண்டில் ஆற்றிய அரும்பணிகளின் தொகுப்பு ஓவிய வடிவங்களின் கண்காட்சி ஆகியவற்றை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இவ்வாண்டில் சிவகங்கை மாவட்டம் – கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம் மற்றும் மணலூர், தூத்துக்குடி மாவட்டம் – சிவகளை, அரியலூர் மாவட்டம் – கங்கைகொண்டசோழபுரம், – கிருஷ்ணகிரி மாவட்டம் – மயிலாடும்பாறை, விருதுநகர் மாவட்டம் – வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் – துளுக்கார்பட்டி, தர்மபுரி மாவட்டம் – பெரும்பாலை ஆகிய ஏழு இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு வருகிறது.

கீழடியில் புதைந்துள்ள கட்டடப் பகுதிகளையும், அரும்பொருட்களையும் வெளிக்கொணரும் வகையில் பெரும்பரப்பு அகழாய்வு நேர்த்தியுடன் நடந்து வருகிறது. இந்த அகழாய்வில் கிடைக்கப்பெற்றுள்ள சான்றுகளின் மூலம் வைகை நதிக்கரையில் நகரமயமாதல் கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் தொடங்குகிறது என்பது தெளிவாகிறது. இவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழர்களின் எழுத்தறிவு, வேளாண்மை, நீர் மேலாண்மை, கட்டடத் தொழில்நுட்பம் போன்ற தலைப்புகளின் கீழ், கீழடியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் மாதிரிகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் இக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சிவகளை வாழ்விடப்பகுதி அகழாய்வில் கிடைக்கப்பெற்ற 'ஆதன்' என்ற தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடு, கீழடியில் ஆதன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓட்டினை நினைவூட்டுகிறது. சிவகளையில் கிடைக்கப் பெற்ற கருப்பு–சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடிகள் போன்றவற்றில் அழகிய வடிவமைப்பில் வரையப்பெற்றுள்ள வெள்ளை வண்ண வேலைப்பாடுகளை நோக்கும்போது சிவகளைப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது. இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நெல்லினைக் கரிமப் பகுப்பாய்வு செய்ததில் இதனுடைய காலம் கி.மு. 1155 என வரையறை செய்யப்பட்டுள்ளது. இக்காலக்கணிப்பின் மூலம் பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினரின் மேம்பட்ட பண்பாடு 3200 ஆண்டுகள் முற்பட்டது என்பதை உமி நீங்கிய நெல்லின் வழிப் பெறப்பட்ட காலக் கணக்கீடு நிலைநிறுத்தியுள்ளது. இவற்றை விளக்கும் வகையில் தொல்பொருட்கள், முதுமக்கள் தாழிகள் மற்றும் அகழாய்வுக் குழி மாதிரி மற்றும் அவற்றின் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்காகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழகம் மேலை நாட்டினருடனும், கீழை நாட்டினருடனும், இந்தியாவின் பிற பகுதிகளுடனும் கி.மு. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை கொற்கை அகழாய்வின் காலக் கணக்கீடு உறுதி செய்துள்ளது. இவ்வகழாய்வில் கிடைக்கப்பெற்றுள்ள சதுர வடிவிலான செங்கல் கட்டுமானம் மற்றும் துளையுடன் கூடிய வடிகட்டும் குழாய் போன்றவற்றின் மாதிரிகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் இக்கண்காட்சியில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூரில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கம் இப்பகுதியின் தொடக்க காலக் குடியேற்றத்தை அறிந்துகொள்வதும், ஈமக்காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள அக்கால மக்களின் வாழ்விடங்களை அடையாளம் காணபதே ஆகும். தற்போதைய அகழ்வாராய்ச்சியானது நீண்டகாலக் கேள்விக்கு விடையளிக்கும் வகையில் ஆதிச்சநல்லூரின் பழங்கால வாழ்விடங்களை தொல்லியல் சான்றுகளின் மூலம் அடையாளப்படுத்தியுள்ளது. இக்கண்காட்சியில் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களின் மாதிரிகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மயிலாடும்பாறை கரிம மாதிரிகளின் ஏ.எம்.எஸ். (AMS) அறிவியல் முறையில் காலக் கணக்கீடு செய்யப்பட்டதில் சுமார் 4200 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இரும்பு காலப் பண்பாடு நிலவியது என உறுதி

செய்யப்பட்டுள்ளது. அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பண்பாட்டு பொருட்கள் வாயிலாக இப்பகுதி புதிய கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ந்து வாழ்விடமாக இருந்துள்ளதையும் அறியமுடிகிறது. இக்கண்காட்சி அரங்கில், மயிலாடும்பாறை அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களான ஈட்டி முனைகள், அம்பு முனைகள், இரும்பினால் ஆன கத்திகள், கோடரி, ஈமச் சின்னங்களில் வைக்கப்படும் படையல் பொருட்கள், மூன்றுகால் குடுவை உள்ளிட்ட பானைகள், கிண்ணங்கள் முதலியனவும், மக்கள் வாழ்விடப்பகுதியில் கிடைத்த வட்டச் சில்லுகள், பாசி மணிகள், சுடுமண்ணால் ஆன பொருட்களும் மற்றும் மயிலாடும்பாறை அகழாய்வின் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கொடுமணல் அகழாய்வில் கற்குவை, கற்பதுகை, முதுமக்கள் தாழி, மற்றும் நெடுங்கல் போன்றவற்றை உள்ளடக்கிய சுமார் 200–க்கும் மேற்பட்ட ஈமச்சின்னங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக 2020–21 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில், இரண்டு பக்கங்களிலிருந்து ஏறி இறங்கும் வகையில் பலகை கற்களைக் கொண்டு அமையப்பெற்ற படிகளுடன் இருபக்கமும் கற்களால் ஆன பக்கவாட்டு சுவர்களுடன் கூடிய கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் மக்களின் பார்வைக்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனைகளை இளைய தலைமுறையினர் மற்றும் பொதுமக்களிடையே கொண்டு சேர்ப்பதற்காக செய்தி மக்கள் தொடர்புத் துறை மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் இணைந்து, கல்லூரி மாணவர்களின் கைவண்ணத்தில் அரசின் முக்கியமான திட்டங்களை ஓவியங்கள் மூலமாக வெளிப்படுத்திட திட்டமிடப்பட்டது. கல்லூரி மாணவ மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்று அரசின் ஓராண்டு சாதனைகளை நேர்த்தியான ஓவியங்களாக அழகுற உருவாக்கியுள்ளனர். இதன்மூலம் அனைத்து தரப்பினரும் அரசின் திட்டங்களை எளிதாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில், மாணவர்களின் ஓவியத் திறன்களை மேம்படுத்திடவும் நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசானது இக்கட்டான கொரோனா காலகட்டத்தில் பதவியேற்ற நாள் முதல் பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பொது மக்களுக்கு நிவாரண உதவிகளையும், அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்தது. வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, மக்களைச் சந்தித்து நிவாரணம் மற்றும் துயர்

துடைப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. மேலும், மருத்துவம், வேளாண்மை, கல்வி, தொழில், உள்ளாட்சி என அனைத்து துறைகளிலும் மக்கள் மேம்பாட்டிற்காகத் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதிய திட்டங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கண்காட்சி இன்று முதல் அனைவரும் இலவசமாகக் கண்டு மகிழும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஏ. கல்பனா ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ. ராசா, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in